# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2465 - 2025 නොවැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2025.11.28

2465 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 114 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, திசெம்பர் மாதம் 05ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் ( பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


113- B 82741 - 403 (2025/11)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

மாரவில மாவட்ட நீதிமன்றம்

மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், இலக்கம் 75, ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02

புதிய முகவரி

மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், இலக்கம் 374, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 2

*- முறைப்பாட்டாளர்கள்-*

வழக்கு இலக்கம் : 434/ MB
நிறைவேற்றல் இலக்கம்: 38/2025

*எதிர்*

1. வர்ணகுல பட்டபெந்திகே அன்டனி அருண ஶ்ரீ மேகவர்ண பெரேரா, சிறி நிவச, மாரவில

*மற்றும்*

இல. 04. சிறி நிவச. மாரவில

"அற்றோணி தத்துவகாரர்"
வர்ணகுல பட்டபெந்திகெ ஜோசப் நெம்சன் டெனிஸ் பெரேரா
சிறி நிவச. மாரவில

*மற்றும்*

இல. 04. சிறி நிவச. மாரவில

*- பிரதிவாதி-*

மாரவில மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் 2024.01.31 ஆந் திகதி வெளியிடப்பட்ட இணக்கத் தீர்வை பிரகாரம் 434 / MB இணைக் கொண்ட வழக்கிற்காக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதி உடன்பட்ட ரூ. 4,337,231.76 பணத்தினைச் செலுத்துவதைத் தவறவிட்டு பிரதிவாதி சேர்ந்திணங்குவதை மீறியுள்ளதனால் மேற்படி சேர்ந்திணங்குவதற்கு அமைவாக முறைப்பாட்டின் வேண்டுதலில் காட்டப்பட்டுள்ளவாறு பிரதிவாதியிடமிருந்து முறைப்பாட்டாளர் அறவிட வேண்டிய முதலாவது சட்டத்திற்கு ஏதுவாகக் கோருவதன் அடிப்படையில் 2022.03.29 ஆந் திகதிக்கு ரூ. 2,223,109.00 இனைக் கொண்ட பணத்தொகை மற்றும் ரூ.2,065,998.73 இனைக் கொண்ட பணத்தொகையின் மீது 2022.03.29 ஆந் திகதி முதல் 16.5 % வருடாந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் முழுத் தொகையையும் செலுத்தும் திகதி வரை வட்டியும், இரண்டாவது சட்டத்திற்கு ஏதுவாகக் கோருவதன் அடிப்படையில் 2022.03.29 ஆந் திகதிக்கு ரூ. 1,040,263.58 இனைக் கொண்ட பணத்தொகை மற்றும் ரூ. 860.000.00 இனைக் கொண்ட பணத்தொகையின் மீது 2022,03,29 ஆந் திகதி முதல் 17.5% வருடாந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் முழுத் தொகையையும் செலுத்தும் திகதி வரை வட்டி மற்றும் ஏல விற்பனை கட்டணம் என்பவற்றை அறவிட்டுக்கொள்வதற்காக இந்த நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நிறைவேற்றல் கட்டளைக்கு அமைவாகத் தடைசெய்யப்பட்டுள்ள இதன் கீழ் அட்டவணையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அசையா ஆதனத்தின் அந்தப் பிரதிவாதிகளுக்கு உரிமையான அனைத்து உரித்துகள் மற்றும் உரிமைகள்.

2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பதிவாளர்/ பிரதி பிஸ்கால் அவர்கள்.

காணிக்குப் பிரவேசித்தல்; மாரவில மக்கள் வங்கிக் கிளை வளாகத்திலுருந்து A3 பாதையில் சிலாபம் நோக்கி சுமார் 700 மீற்றர் போகும் போது சந்திக்கும் ஹொரகொல்ல சந்தியிலிருந்து இடதுபக்கம் உள்ள பர்னாந்து பாதையில் சுமார் 800 மீற்றர் போகும்போது வரும் முச்சந்தியில் வலதுபக்கம் உள்ள பாதையில் சுமார் 400 மீற்றர் போகும் போது அப் பாதைக்கு எல்லையாகப் பாதையின் இடதுபக்கதில் அமைந்துள்ள ஆதனம், ஏலமிடப்படவுள்ள ஆதனமாகும்.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில் , மாரவில காணி பதிவு செய்யும் பிரிவுக்கு உரிய, தெற்கு பிட்டிகல் கோரளை. யட்டகலன் பத்துவே, நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள், மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரிய, மாரவில தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உரிய மாரவில என்ற பெயருள்ள கிராமத்தில் அமைந்துள்ள "பரகஹயாய நெறியவத்த " என்ற பெயருடைய காணிக்கு, டி. பாலச்சந்திரன் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களினால் 2008.02.17 ஆந் திகதி அளந்து பிரித்து 2008.02.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 257 இனைக் கொண்ட அளவை வரைபடத்தின் பிரகாரம் லொட் இலக்கம் 01 இனைக் கொண்ட காணிக்கு எல்லைகள்-

வடக்கு: எம்மானுவெல் தபரேரா மற்றும் அன்டனி தபரேரா ஆகியோருக்குச் சொந்தமான காணி;
கிழக்கு: தல்வில பாதை;
தெற்கு: இந்த அளவை வரைபடத்தின் துண்டு இலக்கம் 2 இனைக் கொண்ட பகுதி;
மேற்கு: சி.பெரேரா என்பவருக்குச் சொந்தமான காணி.

என்ற இந்த குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள அளவில் இரண்டு றூட் பதின்மூன்று தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.2றூ.13.9 பே.) கொண்ட பெரிய காணியின் தரை மற்றும் அதற்குள் அமைந்துள்ள உரிய மரம், செடிகொடிகள், பழங்கள், கட்டிடங்கள் போன்ற சகலவித பொருட்கள் அனைத்தும் இத்துடன் இருக்கின்றன.

காணியின் அளவு; (0ஏ.2றூ.13.9 பே.)

பதிவாளர்/ பிரதி பிசுக்கால்,,
கௌரவ மாவட்ட நீதிமன்றம், மாரவில.

2025, நவெம்பர் 06.

11- 423